Registered No. M. 1159.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

இது
சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்
எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.

மலர் 6. || சித்தார்த்தி௵-தைமீ--1920-ஜனவரிமீ || இதழ் 1

உள்ளுறை. பக்கம்.


| | |
|---|---|
| விநாயகர் துதி ... ... ... | 1 |
| சிவஞானபோதம் ... ... ... | 1 |
| அர்ச்சாதீபம் ... ... | 6 |
| ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம் ... ... | 9 |
| சிவபெருமான் கேழற்கோட்டணிந்தது ... ... | 13 |
| ,, அழல்காலும்விழிபுனைந்தது ... ... | 14 |
| ,, மடங்கலீருரிபுனைந்தது ... ... | 15 |
| புராணசிரவண மகிமை ... ... ... | 16 |
| ஓர் நன்கொடை ... ... ... | 20 |
| சித்தாந்த நவநீதம்—பதி பசு பாசம் ... ... | 21 |
| ,, —பிறவாநாள் ... ... | 23 |
| சிவபரத்துவம் ... ... ... | 24 |
| இவ்வருடத்து நெற்பயிர்விளைவும் விவசாயப் பஞ்சாங்கமும் டைட்டில் பேஜ் பக்கம் ... ... | 3-4 |


பத்திரிகாசிரியர்
இருக்கம் - ஆதிமூலமுதலியார்,
(Retired Accountant, Military Accts., Department.)
நெ. 43, பாளையப்பன் வீதி, எழுகிணறு, சென்னை.

வைதிக சைவ அச்சுகூடம்,
நெ. 292, தங்கசாலை வீதி, சென்னை.
1919.

தபாற் செலவு உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்று.

# சென்னைச் சினடியார் திருக்கூட்டத்தின்

## போஷகர்கள்.

ஸ்ரீமான்-யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள்,
D..., Messrs. Best & Co.

,, வி. மாசிலாமணிப் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்.
Official Referee, High Court.

,, வி. முத்தையா பிள்ளையவர்கள்,
Merchant, Periyanna Moodaly Street, Madras.

,, ஆர். காசிவிசுவநாத முதலியாரவர்கள்,
Snuff & Tobacco Merchant, Madras.

,, திரு. சபாபதி முதலியாரவர்கள்,
Retired Sub-Engineer, Mint Street.

,, C. தருமலிங்கமுதலியாரவர்கள்,
Contractor, Mint Street, Madras.

## அறிவிப்பு.

சந்தாதாரர்கள் பலர் கடிதங்கள் எழுதும்போது தங்கள் சந்தா இலக்கத்தை யெழுதுகிறதில்லை. சிலர் 1159-என்று பத்திரிகையில் அச்சிட்டுள்ள பத்திரிகை இலக்கத்தை எழுதியனுப்புகின்றார்கள். இதனால் சிலசமயங்களில் கடிதம் எழுதுவோர்களின் சரியானவிலாசத்தை யறிவது பிரயாசையாயிருக்கிறது. சந்தாதாரர்களின் இலக்கம் அவ்வவர்களுக்கு அனுப்பும் பத்திரிகையின்மீது சுற்றப்பட்டுள்ள காகிதத்தில் அவ்வவர்கள் விலாசத்தோடு சேர்த்து எழுதப்பட்டேனும் அச்சிடப்பட்டேனும் இருக்கிறது. இதனையே சந்தாதாரர்கள் அவசியம் தெரிவித்திடல் வேண்டும்.

## பித்தவாயு லேக்கியம்.

இதை அவரவர்கள் வயது, சரீரம், ரோய், அநுபவம், அநுகூலங்களுக்கு எற்றபடி, காலை, அல்லது மாலை, அல்லது காலையு மாலையும், அல்லது போஜனத்திற்கு பிறகு, சிறு சிறு கெச்சைக்காயளவு சாப்பிட்டு வந்தால் பித்தவாயு பறந்தோடும். பசிதீபனமும் சரீரபுஷ்டியும் உண்டாம். இதுவே கைகண்ட தாதுபுஷ்டி மருந்துமாம். இதை அநுபவத்தாலறியலாம். இதற்குப் பத்தியமில்லை. 20-வேளை லேக்கியம் அடங்கிய டப்பியின் விலை ரூ. 1-4-0. வி. பி. யில் அனுப்பினால் 4-அணா அதிகமாகும்.

இலங்கை முதலான வேளியூர்களில் தீர்வை விதிக்கப்படுவதனால் அவ்வூரார் முன்பணம் அனுப்பியே பெற்றுக்கொள்ளவேண்டும்.

இருக்கம் - கண்ணப்பமுதலியார்,
நெ, 43, பாளையப்பன் வீதி, ஏழுகிணறு, சென்னை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

மலர்-6 | சித்தார்த்தி௵-தைமீ —1920௵-ஜனவரிமீ | இதழ்-1

## விநாயகர் துதி

சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதிசெயச்
சுத்தியாகிய சொற்பொரு ணல்குவ
சித்தியானை தன் செய்யபொற் பாதமே.

(இ-ள்.) சித்தியானை தன் செய்ய பொன்பாதம் = சித்தி விநாயகக்கடவுளுடைய செவந்த பொன்போலும் அரியதிருவடிகள், சத்தியாய் சிவம் ஆகி தனி பரமுத்தி ஆன முதலை துதிசெய = சத்தியுமாகிச் சிவமுமாகி ஒப்பில்லாத பரமுத்தியுமாகிநின்ற பரசிவத்தை வாழ்த்த, சுத்தி ஆகிய சொல்பொருள் நல்குவ = குற்றமற்ற சொல்லையும் பொருளையும் அருளாநிற்கும் (எ-று.)

—— :o: ——

## சிவஞானபோதம்.

(5-வது மலர் 209-வது பக்கத்தொடர்ச்சி.)

### ஒன்பதாஞ் சூத்திரம்.

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தைநாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மோருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.

(இ-ள்). ஊனக்கண் = பசுஞானத்தாலும்—பாசம் = பாசஞானத்தாலும்—உணரா = அறியப்படாத--பதியை = முதல்வனை—

ஞானக் கண்ணினில் = அம்முதல்வனது ஞானக்கண்ணினாலே—சிந்தை = தன் அறிவினிடத்திலே—நாடி = ஆராய்ந்தறிக. (அப்பதி ஞானத்தைப் பெறுவதெப்படி யெனில்)—பாசம் = நிலம் முதல் நாதம் ஈறாகிய பாசக் கூட்டமானது—உராத்துனை = நின்றுழி நில்லாது பரந்து திரிதற்கண் அதிவேகமுடைய--தேர்த்தென = பேய்த்தேரின் இயல்புடையதென்று அறிந்து (அதாவது கானலானது நீர்போலத் தோன்றிப் பொய்யாய்க் கழிவதுபோல் கழிவ தென்றறிந்து)—ஒருவ = (அப்பாசக் கூட்டத்தினின்றும்) நீங்கவே—பதி = அப்பதி ஞானம்—தண் நிழலாம் = பிறவித்துயராகிய வெப்பத்துக்கு) குளிர்ந்தநிழலாய் வெளிப்பட்டு விளங்கும்--அஞ்செழுத்தே = (அவ்வாறு விளங்கிய ஞானத்தால் முதல்வனைக் கண்ட காட்சி சலியா திருத்தற் பொருட்டுப் பாசத்தினின்றும் நீங்கி முதல்வனை யடைதலை உணர்த்துவதாகிய) திருவஞ்செழுத்து—விதி = அவ்விதிப்படி (யறிந்து)—எண்ணும் = கணிக்கப்படும் (அதாவது செபிக்கப்படும்) (எ-று)

தம் முதல் குருவுமாய் உணர்த்தக் கேட்டு அதனைச் சிந்தனை செய்துணருமாறு அறிவிக்கு முகத்தான், உயிரானது தான் ஐம்புல வேடரின் வளர்ந்தமையாலாகிய அசுத்தத்தினின்றும் நீங்கித் தன்னைப் பரிசுத்தப்படுத்துமாறு உணர்த்துதல் இச்சூத்திரத்தின் கருத்தாம்.

பாச ஞானமாவது பாசமாகிய கருவிகளால் ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம். பசு ஞானமாவது தற்போத முனைப்பால் ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம். பதி ஞானமாவது பதியின் அருளால் ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம்.

ஊனம் = குறை. ஊனக்கண் = குறையுணர்வு. நாடி = நாடுக. உரா = உலாவல் என்னும் பொருளைத் தரும் முதனிலைத் தொழிற்பெயர். துனை = வேகம். உராத்துனை = உலாவுதற் கண் வேகமுடைமை. ஊரா என்பது உராவெனக் குறுகியதாகக் கொண்டு உராத்துனைத்தேர் என்பதற்கு ஒருவராலும் ஊரப்படாத வேகத்தையுடைய தேர் என்று பொருளுரைத்தலுமாம். தண்ணிழலாம் பதி என்பதில் பதி என்பது பதி ஞானத்தைக் குறிக்கும் ஆகு பெயர்.

## இச்சூத்திரத்தின் அதிகரணங்கள்.

1-வது—ஊனக்கண் பாச முணராப் பதியை ஞானக் கண்ணி னிற் சிந்தை நாடி.

2-வது—உராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவத் தண் ணிழலாம் பதி.

3-வது—விதியெண்ணு மஞ்செழுத்தே.

## இச்சூத்திரத்தின் சூர்ணிகை.

1-வது—உயிர் அரன் ஞானத்தினாலேயே அரனைக்காணும்.

2-வது—உயிர் பாசத்திலே பற்றற்றால் அரன் வெளிப்படுவன்.

3-வது—பஞ்சாக்ஷர செபம்பண்ணினால் வாசனாமலம் போம்.

## இச்சூத்திரத்தின் வார்த்திகம்.

1-வது—ஈண்டு அம்முதலை ஞானக் கண்ணினாலே காண்க என்றது—அவன் வாக்கு மனாதீத கோசரமாய் நிற்றலான்.

2-வது—இனி அசத்தாயுள்ள வன்ன பேதங்களை அசத்து என்று காண உளதாய் நிற்பது ஞான சொரூபமென்று உணரற் பாற்று.

3-வது—இனி இவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்க என்றது—இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை, வேம்புதின்ற புழுப்போல, நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின் அது நீக்குதற்கு எனக்கொள்க.

இதின் உதாரண வெண்பா எட்டு.

---

## முதலதிகரணம்.

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக்கண்ணினிற் சிந்தை நாடி.

(இ-ள்.) பசுஞானத்தாலும் பாசஞானத்தாலும் அறியப்படாத முதல்வனை அம்முதல்வனது ஞானக் கண்ணினாலே தன் அறிவினிடத்தே ஆராய்ந்தறிக (எ-று).

இதில் 1-வது—தன்னாற் கூறப்படும் பொருள்.—உயிர் பதி ஞானத்தாலேயே அரனைக்காணும்.

2-வது—ஐயப்பாடு—முதல்வன் பசு ஞானத்தாற் காணப்படுவனோ, பதி ஞானத்தாற் காணப்படுவனோ.

3-வது—பிறர் கூறும் பக்கம்—சுட்டியறியும் பசுத்துவம் உள்ளபோது செயற்கையால் ஏகதேசத்தின் விளங்கும் பசு ஞானமானது, அப்பசுத்துவம் நீங்கியபோது சிவஞானத்தோடொப்ப எங்கும் வியாபகமாய் விளங்கும் என்பது சிவாகம நூற்றுணிபாகலின், அவ்வாறு சுட்டிறந்தறிவதாகிய பசுஞானத்தால் முதல்வன் காணப்படுவன் என்பது பெறப்படும். (இவ்வாறு கூறுவோர் சிவ சமவாத சைவர்.)

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு—குருவருளாலே உணரப்படும் சிவ ஞானத்தாலே சிவனையறிந்தவர் அச்சிவனில் வியாப்பியமாய் நின்று (அதாவது அடங்கி நின்று) அவ்வாறு அறியும் பொருளாகிய தம்மையும் அறிவர். அவ்வாறு தலைவனையறிந்தபின் அறியப்படுவதாகிய தம்மறிவு கொண்டு தலைவனை எங்ஙனம் அறிதல் கூடும்? ஆதலால் முதல்வன் பதி ஞானம் ஒன்றினாலேயே காணப்படுவன் என்பது துணியப்படும்.

5-வது இயைபு.—

உதாரண வெண்பா.

நாடியோ வென்போ நரம்புசீக் கோழையோ
தேடி யெனை யறியேன் றேர்ந்தவகை—நாடியரன்
றன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணா
ரென்னு மெனவறிவா ரின்று.

(இ-ள்.) நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ=நான் யார், இடை பிங்கலை முதலிய நாடிகளோ, நரப்போ, சீ எனப்படும் புண்ணீரோ, கோழை யெனப்படும் சிலேட்டுமமோ—தேடி எனையறியேன் (என்று)= என்னைத்தேடியும் அறிகின்றிலேன் என்று—தேர்ந்தவகை நாடி=இவ்வாறு தேர்கின்ற தேர்ச்சியறிவின் கண்ணே இதனைத் தெளிவிப்பதோர் அறிவு வேறு உண்டென ஆராய்ந்து நோக்கி—அரன் தன்னாலே தன்னையும் கண்டு தமைக் காணார்= (அவ்வாறு நாடுங்கால் விளங்கித் தோன்றுவதாய) முதல்வனது திருவடி ஞானத்தால் முதல்வனையும் உணர்ந்து (முதல்வனின் வியாப்பியமாய் நின்று அங்ஙனம் அறியும்பொருளாகிய) தம்மையும் உணர்தலைச் செய்யாதார்—என் என அறி

வார் இன்று = மற்றெவ்வியல்பினரென்று தம்மை அறியவல்லுநர் இம்முத்திகாலத்து (எ-று.)

நரம்பு என்றதில் நாடியும் அடங்குமாயினும் தலைமைபற்றி நாடியை வேருகக்கூறினர்.

நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ என்ற உபலக்கணத்தால் ஏனைத்தத்துவங்களினும், அவற்றின் காரியமாகிய புறக்கருவிகளினும் அவ்வாறு தெளிதல் கொள்ளப்படும்.

ஒகாரம் தெரிநிலை—தேடியெனை யறியேன் (என்று) என்பதில், என்று என்பது சொல்லெச்சம்—வகையென்பது அறிவைக் குறிக்கும் ஆகுபெயர். ஞானத்திற்கும் அரனுக்கும் உள்ள ஒற்றுமையைநோக்கி அரனது ஞானத்தை அரன் என்று உபசரித்தார். தன்னை = தலைவனை. தமை = உயிரை. ஆம் அசை.

இவ்வெண்பாவினுல் முதல்வன் அருளால் (அதாவது சிவஞானத்தால்) அம்முதல்வனையும் தன்னையும் அறியும் இயல்புடைய உயிர் தன்னறிவால் முதல்வனை யறிதல்கூடாது என்பது விளக்கப்பட்டமை காண்க.

## திருக்குறுந்தொகை.

என்னையேது மறிந்தில னெம்பிரான்
றன்னை நானுமுன்னேது மறிந்திலேன்
என்னைத் தன்னடியா னென்றறிதலுந்
தன்னைநானும் பிரானென் றறிந்தேனே.

## உதாரண வெண்பா.

காட்டிய கண்ணே தனைக்காணு கண்ணுக்குக்
காட்டாய வுள்ளத்தைக் கண்காணு—காட்டிய
வுள்ளந் தனைக்காணு துள்ளத்தின் கண்ணுய
கள்வன்று னுள்ளத்திற் காண்.

(இ-ள்.) காட்டிய கண்ணே = (உயிரால்) காட்டப்பட்டு ஒரு விடபத்தைக்காண்கின்ற கண்ணனது (அதாவது ஒருவிடயத்தை உயிர்காட்டக் காணும்கண்ணனது)—தனைக்காணு = தன்னியல்பைக் காணுமாட்டாது.—கண்ணுக்குக்காட்டு ஆய உள்ளத்தைக் கண்காணு = தனக்கு அவ்விடயத்தைக் காண்பித்து முதலாய்நிற்கும் உயிரையும் அது காணமாட்டாது—(அதுபோல்)—காட்டிய உள்ளம் தனைக்காணுது = (முதல்வனுல் மறைந்துநின்று) உணர்த்

பட்டு ஒன்றைத் தேர்ந்துணர்கின்ற உயிர் அவ்வாறே தன்னியல்பையும் அறியமாட்டாது. (தன்னை உணர்த்திநிற்கும் முதல்வனையும் அறியமாட்டாது.)--உள்ளத்தின்கண் ஆய கள்வன்தான் = அத்தேர்ச்சியறிவின் கண்ணும் உடனாய் நிற்குங்கள்வன் அம்முதல்வன், (ஆதலால்)—உள்ளத்தில்காண் = அவனை அவ்வறிவின்கண் வைத்து நாடித் தெளிவாயாக (எ-று.)

இவ்வெண்பாவினால், தன் எதிர்முகத்துள்ள ஒருபொருளைக் கண்ட கண்ணே திரும்பிப்பார்க்குமிடத்து முதுகுப்புறத்துள்ள பொருளையும் காணக்கூடும். அதுபோல நாடி முதலியவற்றைத் தேர்ந்து அறிந்த உயிரே தன்னையும் தலைவனையும் தெளிந்தறியக்கூடும் என்னும் சமவாத சைவரைமறுத்து, எதிர்முகமாகக் காணப்படும்பொருளும், முதுகுப்புறமாகக் காணப்படும்பொருளும் புறத்துள்ள சடப்பொருள்களாதலினால் அவ்விரண்டையும் கண்காணும். அக்கண் தனக்குள்ளிருக்கும் ஒளியையும், உயிரையும் காணமாட்டாது. அதுபோல் உயிரானது தன்னையும் தலைவனையும் தானே அறியமாட்டாது. ஆனால் அது கண்போல் சடமாகாமல் அறிவுப்பொருளாயிருத்தலால் தலைவன் அருளால் தன்னையும் தலைவனையும் அறியும் என்று உணர்த்தியவாறும்.

கண்ணே என்பதில் ஏகாரம் அசைநிலை. காணு = காணுது. இதில் துவ்வீறு விகாரத்தாற்றொக்கது. இறைவன்தோன்றாது நிற்றல்பற்றிக் கள்வன் எனப்பட்டான். "என் உள்ளங்கவர் கள்வன்" என்றருளிச்செய்தனர் திருஞானசம்பந்தப்பெருமானாரும்.

## அர்ச்சாதிபம்.

(5-வது மலர். 192-வது பக்கத்தொடர்ச்சி.)

இதுகாறும் பரனுக்கு உருவங்கிடையாது என்றும், அவனை விக்கிரகமாக வணங்குவது கூடாது என்றும் வேதவேதாந்தங்கள் கூறுவதாக நம்மவர் பிரமித்துப் பேசியதற்கு அவனுக்கு உருவம் உண்டென்றும், அவனை விக்கிரகமாக வணங்குவது கூடுமென்றும் அவர் தேடியப்பிரமாணம் ஒன்றுக்கு ஒன்பதாக எடுத்து வேதங்களிலிருந்தே உதகரித்து, அவர்கள் காட்டிய வேதவசனங்களால் எமக்கு விரோதமுண்டாகாமையையும், யாம் காட்டிய வேதவசனங்களால்

அவர்களுக்கு விரோத முண்டாகின்றமையையும் பிரகாசம்பண்ணி னோம். இனி, அவர்கள் பரனுக்குக்கூறும் அருவம் எம்மட்டில் சாதிக்கப்படு மென்பதையும், அவனை அர்ச்சையிலாராதியாத போது அவர்களுடைய வழிபாடு எம்மட்டில் நிலைபெறு மென் பதையும் ஒருவாறு நியாயமுகத்தால் விசாரிக்கத் தொடங்குவாம்.

பரனைக் கேவலம் அருவமென்று அவர்கூறுவர். உருவத்தை ஒப்பார். ஏனெனின், (நண்ணிடுமுருவமென்னி னமக்குளவுருவம் போலப்பண்ணிடவொருவன்வேண்டும்) என்னுநியாயத்தால். நமக் குளவுருவம் ஜடம். ஜடம் தானேகாரியப்படாது. காரியத்துக்குக் காரணமும் வேண்டும். காரியமெத்தன்மைத்தோ காரணமுமத் தன்மைத்தாம். காரியமாகியவுடல் ஜடம். இதற்குக்காரணமாகிய பிரகிருதியுஞ்சடம். இந்தக்காரணமாகிய ஜடத்தைச் சித்தாவா னொருவன் காரியப்படுத்துவன். பிறப்பு-இருப்பு-இறப்பு என்னு முத்திறத்தால் இப்படியே பரனுருவுங்கொள்ளப்பட்டுத் (தோன் றின மறையும்) என்னு நியாயத்தால் அலக்கண்பெறும். ஆகை யால், பரனை உருவெனல்கூடாது. அருவமெனலே தேற்றம் எனச் சாதியாநிற்பர். இந்தச்சாதனையை (உலகினிற்பதார்த்தமெல்லா முருவமோடருவமாகி, நிலவிடுமொன்றொன்றாகா நின்றவந்நிலையே போல, வலகிலாவறிவன்றானு மருவமேயென்னிலாய்ந்து, குலவிய பதார்த்தத்தொன்றாய்க் கூடுவன்குறித்திடாயே) என்னுந் திரு வாக்கு மறுக்கும்! மறுக்கும்!! பரன் அருவமென்னில், ஆகாயம் அருவம். அந்த அருவம் ஜடம். ஜடம்தானே காரியப்படாது. காரியத்துக்குக் காரணமும் வேண்டும். காரியமெத்தன்மைத்தோ காரணமுமத்தன்மைத்தாம். காரியமாகிய ஆகாயம் ஜடம். இதற் குக் காரணமாகிய பிரகிருதியுஞ்சடம். இந்தக்காரணமாகிய ஜடத் தைச் சித்தாவானொருவன் காரியப்படுத்துவன் பிறப்பு-இருப்பு இறப்பு என்னு முத்திறத்தால். இப்படியே பரனது அருவுங்கொள் ளப்பட்டு அலக்கண்பெறும். ஆகையால், பரனை அருவெனல் கூடாது. உருவருவல்லவெனலே தேற்றம். உருவென்றபோது ஆன குற்றமே அருவென்றபோதும் ஆயினமையால், உருவும், அருவும், இரண்டுங்கூடிய உருவருவும் ஆகிய மூன்றும் அவன்றன்மையா காது! ஆகாது!! பூமியைப்போல உருவமும், ஆகாயத்தைப்போல அருவமும், சந்திரனைப்போல உருவருவமும் பரனிலக்கண மாகா மையால், இவற்றைத்தோராது உருவமென்பாரை மறுத்து அரு

வமே அது என்று நம்மவர் சாதிப்பது ௪+௫=(௯) என்பவரை மறுத்து, ௪+௫=(௫) என்று சாதிப்பதாக முடிந்தது.

இனி, நம்மவர்பதியினது உருவத்தைப் பசுவினது உருவத்தைப்போலக் கொண்டமையே வீணுசங்கைக்கிடஞ்செய்தது. பசுவுக்குத்தான் பாசத்திலுருவங்கூறலாம். பதிக்கும் அப்பாசத்தில் உருவங்கூறுதல்—எங்ஙனம்? (மாயைதான் மலத்தைப்பற்றி வருவதோர்வடிவமாகு-மாயவாணவமகன்ற வறிவொடுதொழிலையார்க்கு நாயகனெல்லா ஞானத் தொழின்முதனண்ணலாலே — காயமோமாயையன்று கண்பது சத்திதன்னால்) என்னுந்திருவாக்கால் பரனது உருவத்தன்மை வியக்தம். பசுவுக்குக்கூறும் அங்கம் அதற்கு ஸ்வப்ரயோஜனம். பதிக்குக்கூறும் அங்கம் அதற்கு ஸ்வப்ரயோஜனமன்று. அதுபசுவுக்கு உபகரித்தற்கே அதனால், பரப்ரயோஜனார்த்தமான அருண்மேனியெனல் சாலும். மலபத்தரான பசுக்களுருவும், மலமுத்தரான பதியினுருவுமொன்றாதல் யாண்டமையும்? வேதத்தில், "விஸ்வாதிகோருத்ரோ மஹர்ஷிঃ" என்று பரனாகிய உருத்திரனை விஸ்வங்களைக் கடந்தவனென்று விளக்கலால், அவனுக்கு மாயாகனமேனி கூறுதல் மாட்சிபெற்றிலது. "பராஸ்யசக்திர்விவிதைவஸ்ரூயதே" என்னுஞ் சுருதிபரியாலோசனையால் பரனது உருவும், அதிற்றோன்றுந் தொழிலுங் குணமுமாகிய கரணமும், கரசரணாதி யுறுப்புக்களும், உபாங்கமாகிய புவனபோகங்களும் ஆகியயாவும் பரனில் வேறாகாத சத்தியேயாம். சத்தி, அருள் என்பது ஒன்றாகலின், யாவுஞ் சத்தியென்றபடியே யாவும் அருள் என்றலும் அமைவுடைத்து. "உருவருள் குணங்களோடு முணர்வருளுருவிற்றோன்றுங், கருமமுமருளரன்றன் கரசரணாதிசாங்கந், தருமருளுபாங்கமெல்லாந் தானருடனக்கொன்றின்றி, அருளுருவுயிருக்கென்றே யாக்கினனசிந்தனன்றே" என்னுந் திருவாக்காலும் அது சிறக்கும். இந்தவிசாரத்தால் பானுக்குக் கூறுமுருவம் ஆசங்கைக்கிடஞ்செய்யாது நிலைத்தது. உருவம் நிலைத்தமையால், அருவும், உருவருவங்கூடவே நிலைத்தன. காரியகாரணங்களில் காரணத்தின்றன்மையே காரியத்திற் காண்டலால், மாயாகனங்களாகிய ஜடமேனிகளும், சித்கனங்களாகிய அருண்மேனிகளும் ஒன்றினொன்று தன்மை வேறுபட்டுப் பசுவுக்குக்கூறும் உருவாதிமூன்றும் ஒருபடித்தாயும் முரணின்றி நிலையுதல்பெறும். ஒன்று மற்றொன்றாகாமையால் தன்மைவேறுபட்டுநின்றமையால், (நண்ணிடு

முருவமென்னி னமக்குள வுருவம்போலப்-பண்ணிட வொருவன் வேண்டும்.) என்று பூர்வபட்சிகள் பரனுருவத்தை மறுத்தசமாதானம் பறந்தொழிந்தது. என்னை? பசுவுக் குரைத்தல்போலவே பதிக்கு உருவாதி மூன்று முரைத்தலெனின், என்னை? பதிக்கு அருவமாத்திர முரைத்தலென்னு மாசங்கையுண்டாம். அன்றியும், அவை மூன்றுங் கூறுவதால் பரனிடத்து நிகழும் குற்றம்யாது எனவுங் கடாவவரும். மண்ணாலானவுருவமும், பொன்னாலானவுருவமு மொன்றாகாது. மண்ணின்றன்மை மண்ணுக்கும், பொன்னின்றன்மை பொன்னுக்கு முள்ளவாறே பசுவுக்கும் பதிக்கு முள்ள வுருவத்தன்மைகணிலைக்கும். மண்ணின்றன்மைக்குத் தாழ்வுகூறுவதுபோலப் பொன்னின்றன்மைக்குத் தாழ்வுகூறமுடியாது. இப்படியே பசுவுக்கும், பதிக்கும் உருவங்கள் சிறத்தலால், பதிக்கு உருவாதிகள் எற்றுக்கு என்று எழுங்கடா பயனற்றதேயாகும்.

---

## ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம்.

---

(5-வது மலர் 200-வது பக்கத்தொடர்ச்சி.)

வெள்ளிய பல்லும் வெள்ளிய கோவணமும் வெள்ளிய பூணூலு முடையராய், தண்டகமண்டலம் - கிருஷ்ணாசனம் - மௌஞ்சிமாலை-உருத்திராக்ஷம்—தர்ப்பை-பவித்திரம் என்பவைகளைத் தரித்து, அரதத்தாசாரியசுவாமிகள் பிரதமாச்சிரமமாகிய பிரமசரியத்தை அநுஷ்டிப்பாராயினர். காலை மாலைகளிலே சமிதாதானஞ் செய்வார். தமது லோககுருவாகிய தக்ஷிணாமூர்த்தி சந்நிதானத்திலே எப்பொழுதும் எழுந்தருளியிருந்து, வேதாத்தியயனத்தினாலே முனிவர் கடன் கழித்தார். பிதுர்க்கடன் தீர்க்கும் கிரகஸ்தாச்சிரம விரதந் தொடங்குதற்கு முன்னே கோதானஞ் செய்து பிரமசரியவிரதங்களைச் சமாப்திசெய்தார். இதுநிற்க,

அந்தக் கம்சாபுரத்திலே சதாசாரமுடையரும், சாந்தரும் பஞ்சயக்ஞம் செய்பவரும், அன்பினோடு திரிகாலமும் சிவபூசை செய்பவரும், வைதிக விபூதியினாலே உத்தூளனஞ் செய்பவரும் உருத்ராக்ஷதாரணஞ் செய்பவரும், பஞ்சாக்ஷரசெபஞ் செய்பவ

ரும், சிவசந்நிதியிலே பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்பவரும், சிவனடியார்க்குத் திருத்தொண்டு செய்பவருமாகிய சுப்பிரதீகர் என்னும் பிராமணர் ஒருவர் இருந்தார். வாதூலகோத்திரம் என்னுஞ் சமுத்திரத்துக்குக் கமலாக்ஷீ என்னுஞ் சந்திரன் அவருக்கு மனைவியாய் உதித்தது. இக்கமலாக்ஷி என்பார் தமது நாயகரை மிகுதியும் பிரீதிசெய்து, அருந்ததி அனசூயை என்பாரைப்போல் சுற்பினிற்சிறந்து அதி சௌந்தரியமுடையராய் நாயகருக்குத் திருத்தொண்டு செய்தலில் மிகு பற்றுடையரா யொழுகினர். பூமிதேவியானவள் இரத்தினந் தரித்தாற்போல, இவ்வம்மையார் திருவயிற்றிலே ஒர் கர்ப்பம் எய்திற்று. இவருடைய லட்சுமீகரமாகிய உதரமானது பெருக்கு மியல்பு பூண்டது; அவர் நாயகரும் சீமந்தாதி வைதிக கன்மங்களைச்செய்தார். பின்னர் மகா சௌந்தரியமான பெண்குழந்தை ஒன்று லட்சுமீகரத்தோடு பிறந்தது. அப்பெண் குழந்தை பிறந்ததினத்திலே பிதாவாகிய சுப்பிரதீகர் மங்களோற்சவம் நடத்தினர். சிவபக்தர்களுக்கும் பிராமணர்களுக்கும் தனதான்னியங்களை வேண்டியவாறு அளித்தார். தமதுபுதல்வியாரை வளர்த்துச் சாதகருமம் நாமகரும முதலியன செய்தார். புதல்வியாருக்குக் கமலவல்லி என்று நாமகரணஞ்செய்தார். அக்கமலவல்லியும் பூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டுத் தவழ்ந்துசென்றும், சிறுபெண்களோடு மண்விளையாட்டயர்ந்தும், மழலை வார்த்தை பேசியும் தமது தந்தை தாயரைப் பிரீதிசெய்து வந்தாள். இரத்தின மாணிக்க மேகலையினுலும், பலவித சித்திரமாகிய பட்டுவஸ்திரங்களினுலும், புஷ்பமாலைகளினுலும் சிறந்து, கண்டோர் யாரும் அதிசயமுறும்படி அக்குழந்தை விளங்கினள்.

அக்காலத்திலே சிவலிங்கபூபதியானவர் கம்சாபுரத்துக்கு மீட்டும் வந்து ஆசாரியசுவாமிகளை நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ்செய்து அவர் தந்தையாராகிய வாசுதேவரைநோக்கி, எமது ஆசாரியருக்கு விவாகஞ் செய்தற்குரிய காலஞ் சமீபித்ததே என்று சொல்ல, சமீபத்திலே ஆங்கிருந்த சுப்பிரதீகர் அரசனை நோக்கி, யாம் எமது புத்திரியை விவாகஞ்செய்து கொடுப்போம் என்றும், அதுநோக்கித் தாமசஞ் செய்யவொண்ணுதென்றும் அறிவித்தார். உடனே விவாக மகோற்சவஞ்செய்ய ஆரம்பித்து சோதிடரை வருவித்து, முகூர்த்தஞ் நிச்சயித்து, பிதா முதலாயினரோடு தமது பந்துக்கள் யாவரும் வரும்பொருட்டு விவாகபத்திரம் அனுப்பிவிட்டு விரதாதி

களையும் கோதானாதிகளையும் நடாத்தி, கம்சாபுரத்து வீதிகளை வாழை கமுகுகள் நாட்டி, தோரணங்களையும் கொடிகளையும் தூக்கி அலங்கரித்தார். அன்றியும் கம்சாபுரத்தார் தத்தம் கிருகங்களைச் சிறப்பித்து கோலங்களிட்டு சித்திரித்து அலங்கரித்தார்கள். பந்துக்களெல்லாம் பட்டுக்களையும், பீதாம்பரங்களையும் விலையுயர்ந்த மற்றைய பரிசுகளையுங்கொண்டு கல்யாண வீட்டுக்கு வந்தார்கள். நானா தேசங்களினின்றும் போந்துவந்த ஜனங்களினாலே கல்யாணமண்டபம் நிறைந்து போயிற்று. மகாயாகங்களிலே எவ்வளவு சம்பாரங்கள் வேண்டப்படுமோ அவ்வளவு பொருள்களினாலும் கல்யாண மண்டபத்தைச் சிவலிங்கபூபதி நிறைப்பித்தார். கம்சாபுரத்திலுள்ள கிருகங்களெல்லாஞ் சிறப்பினால் வாய்ந்தன. பிராமணர்களெல்லாம் ஒருங்கு குழுமிய விடத்திலே விவாகத்தின் பொருட்டுப் புத்திரர் அங்குரார்ப்பணஞ்செய்தார். அவர் தந்தையராகிய வாசுதேவரும் பற்பல இடங்களினின்றும் போந்த பந்துக்கள் முதலாயினோரை யெல்லாம் பற்பல உபசாரங்களினாலே மகிழ்வித்தார்.

சுப்பிரதீகரும் புதல்வியின் விவாகத்தின் பொருட்டுத் தமது கிருகத்தை அலங்காரஞ்செய்து முத்துச்சரங்களினாலும், தீபஸ்தம்பங்களினாலும், பூர்ணகும்பங்களினாலும், சந்தன அகிற்புகைகளினாலும், விவாகசாலையை மேன்மைவாய்ப்பச் சிறப்பித்தார். இவருடைய பந்துக்களெல்லாம் நானாவித வஸ்திராபரணாதிகளால் அலங்கரித்துக்கொண்டு வந்தார்கள். விவாகசாலையின்கண்ணே பலவகை வாத்தியங்களும் வேதங்களும் கோஷிக்க, வேதோக்தமாகப் பிராமணர்கள் புண்ணியாகவாசனஞ்செய்தார்கள்.

விவாகத்துக்கு முதற்றினத்திலே ஆசாரிய சுவாமிகளுக்கு இரக்ஷாபந்தனமும், அங்குரார்ப்பணமும், சமாவர்த்தனமும் விதிப்பிரகாரஞ் செய்து பிரமணர்களுக்குத் திரவியங்களை இறைத்தார்; விவாகசபை மிகவும் பிரகாசித்தது. அக்கினியை ஓம்ப, அது வளர்ந்து வலஞ்சுழித்து ஓங்கிவாய்ந்தது. புஷ்பதூளிகளெல்லாம் மலிந்தன. விபூதி ருத்திராக்ஷ தாரணர்களாகிய சிவபக்தர்கள் பிரகாசித்தார்கள். தென்றல் மந்தமாய் வீசிற்று. பிராமணர்கள் அறுசுவையோடும் போசனஞ் செய்து வந்திருந்து, இதற்கு முன்னர் இப்படிப்பட்ட இனியரசங்களை புசித்தேயில்லை என்று புகழ்ந்து பாராட்டினார்கள். அவரெல்லாம் மிக திருப்திகரமுடையராய் அர அர அர என்று முழக்கினார்கள். சிவபக்தர்களை உபசரித்தார்கள்.

வதூவரன் என்னும் இருவரும் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்ட
பாலிகையைச் சல முதலிய பிரயோகஞ்செய்து வளர்த்தார்கள்.
வாசுதேவரும் சுப்பிரதீகரும் முறையே தத்தம புதல்வர் புதல்விய
ருடைய அங்குரார்ப்பண பாலிகையைக்கண்டு மகிழ்ந்தார்கள்.
வாசுதேவர் தமது புதல்வரை விவாகோற்சவத்திற்கு உசிதமாகிய
உயர்ந்த வஸ்திரங்களினால் அலங்கரித்து, கல்யாணவேதி மத்தியி
லிடப்பட்ட திவ்ய ஆசனத் திருத்தி, பரிமள திரவியங்கள் கலந்த
சந்தனம் பூசி, சுகந்த ஜாதி புஷ்ப மாலைகள் சூட்டி, பாதரசம் கடி
சூத்திரம் முத்தாரங் நக்ஷத்திராகாரமாலை என்பவைகளால் அலங்
கரித்து, சுவர்னமும் முத்தும் கலந்து அமைக்கப்பட்ட உருத்தி
ராக்ஷமாலைகளைச் சிரசிலும உரத்திலும் புயத்திலும் பொருந்த
அணிந்து, விரல்களை மோதிரங்களினாலும், காதுகளை இரத்தின
குண்டலங்களினாலும் அலங்கரித்து, நெற்றியை நல்ல வெள்ளிய
விபூதியினாலே விளங்கச்செய்து, பொன்னாற்செய்து முத்துக்களால்
நிருமித்து அமைக்கப்பட்ட கிரீடத்தைச் சிவபெருமானால் ஞானாபி
ஷேகஞ் செய்யப்பட்ட அரதத்தாசாரிய சுவாமிகள் சிரசிலே சூட்டி
னார்கள். அவ்வாறு மணக்கோலஞ் செய்யப்பட்ட ஞானமூர்த்தி
அழகுக்கு அழகு செய்தாலொப்ப விளங்கினமையைப் பந்துக்க
ளானோரெல்லாங் கண்டு மகிழ்ந்தார்கள். சபையினரால் திருஷ்டி
தோஷம் விளையாவண்ணம் விபூதியையே அவருக்குப் பின்னும்
அணிந்தார்கள். குருமூர்த்திகளாகிய ஆசாரியருடைய திருமேனி
யைத் தரிசித்துப் பல்லோர் பணிந்தார்; பல்லோர் துதித்தார். இங்
ஙனம் நிகழ; ஆசாரியர் அக்கினீசுவரப் பெருமானைத் தரிசிக்கு
மாறு பாதசாரியாய்ச்சென்று, ஆலயத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து
சுவாமியை நமஸ்கரித்துக்கொண்டு கிருகத்துக்கு மீண்டார். அப்
போது அவரைப் பின்னர் முத்துச்சிவிகையில் எழுந்தருளச்செய்து
கிராமப்பிரதக்ஷிணஞ் செய்யத் தொடங்கினார்கள். அப்போது பந்
துக்களாயினோரெல்லாம் தத்தம் வாகனங்களிலிவர்ந்து சென்றார்
கள். சங்கம்-காகளம்-பேரி-மிருதங்கம்-சின்ன முதலிய வாத்திய
கோஷங்களால் திக்குகளெல்லாம் நிறைந்தன; பட்டுக்கொடிகள்
ஆகாயத்திலே மலிந்தன; அநேக கோடி சாமரங்கள் யாண்டும்
அசைந்தன; சோமயாசிகளெல்லாம் அக்கினிகோத்திர சகிதராய்
மனைவியரோடு புறப்பட்டார்கள்; அநேக கானங்கள் யாண்டு
மெழுந்து செவிகளிற் புகுந்து சுவைத்தன; புருடரும் பெண்களும்

சிவசோபையோடு விளங்கினர்கள்; சிவகிங்கரர்களும் ஆண்டே குழுமினர்கள்; சாமரங்களும் வீசணிகளும் சிறக்க நாகவாகனத்தின் மீது வெண்கொற்றக்குடை விளங்குவது சமுத்திரத்தில் சந்திரோதயம் விளங்கினமையை நிகர்த்தது; வெண்சாமரங்களும் முத்துமாலைகளும் பல்லக்குச் சாளரங்களும் வாயுவினலே அசைந்து சமுத்திர அலைகளை ஒத்தன; ஆசாரிய சுவாமிகள் வீதியிலே எழுந்தருளும்போது நகரவாசிகள் தத்தம் வீடுகளிலிருந்து பழங்களும் நாளிகேரங்களுங்கொண்டு உபசரித்துச் சிறப்பித்தார்கள்; ஆசாரியர் பந்துக்கள் சிவனடியார் முதலாயினரோடு சுப்பிரதீகருடைய விவாகசாலையை நோக்கி எழுந்தருளினர். அப்போது சுப்பிரதீகரும் தமது பந்துசனங்களோடு அவரை எதிர்கொண்டு உபசரிக்க, அவர் கிருகத்தினுள்ளே பிரவேசித்து, பூஷணங்களுக்கெல்லாம் அழகை விளைவிக்கும் பிரகாசத் திருமேனியையுடைய அவ்வாசாரியர் முத்துப்பல்லக்கினின்றும் இழிந்தருளி, பட்டுநடைப் பாவாடையின்மீது நடந்து போந்து விவாகமண்டபத்தை அடைந்து, வேதிகையி லிடப்பட்ட சுவர்ணசனத்தின்மீது எழுந்தருளினர்.

ம. தி. பாநுகவி சுவாமிகள்.

## சிவபெருமான்
## கேழற்கோடணிந்தது.

பொற்கண்ணனாகிய இரணியாக்ஷன் என்னும் அவுணன் பூமியைப் பாயாகச்சுருட்டி வயிற்றுள் வைத்துக்கொண்டு பூமியின் கீழுள்ள பிலத்துவாரத்தில் மறைந்திருக்க, திருமால் வராகவடிவேற்று அவனைக்கொன்று பூமியை முன்போல் விரித்து அகங்கரித்து, சர்வான்மாக்களும் அஞ்சும்படி கோபித்தனர். அதுகண்ட இந்திரன் - பிரமன்முதலானோர் திருக்கயிலையை யடைந்து சிவபெருமானைத் துதிக்க பெருமான் குமாரக்கடவுளை நோக்க, அவர் பன்றி வடிவுற்ற விண்டுவின் பக்கல்சென்று, அவ்வராகத்தி னிறுமாப்பு நோக்கித் தமது திருக்கரத்திலிருந்த வேலாயுதத்தால் நெற்றியிற் குத்தி நிலத்தோடமுச்கிக் கொம்பைப்பறித்துச் சிவபெருமானது திருச்சந்நிதியில் வைத்தனர். தேவர் வேண்டுகோளின்படி பின்

ஞொரு கால் நாராயணன் செருக்கடையாவண்ணம் எம்பெருமான் அதனைத் திருமேனியில் தரித்துக்கொண்டனர். திருமால் செருக்கொழிந்து காஞ்சிநகரிற் சிவார்ச்சனைசெய்து வராகபுராணம் கூறிப் பண்டையவடிவுடன் வைகுந்தமடைந்தனர்.

உபதேசகாண்டம் - வராகாவதாரச்சருக்கம்.

"பரந்த பாற்கடற் பாப்பணைப் பள்ளியான்
முரண்ட ருந்திறற் பன்றியின் மூதருக்
கரந்து வையகம் யாவுங் கலக்கலா
லரந்தை பெற்று வெருக்கொண்ட தாருயிர்.

ஆடல் வேல்கொண் டமுக்கலுஞ் சோரிநீர்
பாட கன்றது பாதலஞ் சேர்ந்ததா
லூடு புக்கிழிந் தின்னத ஞெண்பிறைக்
கோடு பற்றிப் பிடுங்கினன் கோதிலான்.

மாய மாய வராக வுருக்கழிந்
தாய மாய னரனை யருச்சியாத்
தீய வாணவச் செய்கைச் செருக்கறப்
போயொ ழிந்து தனதுழைப் போயினன்."

## சிவபெருமான்
## அழல்காலும்விழிபுனைந்தது.

---

பிரமன் கையிலிருந்த வேதத்தைப் பறித்துக்கொண்டுபோய்ச் சோமுகாசுரன் கடலுக்குள் ஒளிக்க, திருமால் மச்சவடிவேற்று அவனைச் சங்கரித்து இறுமாப்பால் மகாமேருவைப்போன்ற திருமேனியோடு சத்தசமுத்திரங்களையுங் கலக்க, ஜலப் பிராணிகளுஞ் சர்வான்மாக்களுந் துன்புறுதலைக்கண்ட தேவர்கள் திருக்கயிலையடைந்து சிவபெருமான்பால் விண்ணப்பஞ்செய்ய, பெருமான் அருகிருந்த சாத்தாவை நோக்கி "விஷ்ணு மச்சவடிவோடடைந்திருக்குஞ் செருக்கையடக்குக" என்றருள, சாத்தா வலையர்வடிவுடன் சென்று தமது திருக்கரத்திருந்த வலையைச் சத்தசமுத்திரமும் நிரம்பும்படி வீசி, மச்சவடிவாகிய விஷ்ணுவைப்பிடித்து இரு

கண்களையும் பிடுங்கிச் சிவபிரான் திருமுன்வைத்தனர். பின்னொருகால் விண்டு செருக்கடையாவண்ணந் தேவர் வேண்டுகோளின்படி அதனைத் தமது திருமேனியில்தரித்தனர். திருமால் செருக்ககன்று திருக்காஞ்சியிற் சிவலிங்கார்ச்சனை புரிந்து மச்சபுராணம் ஓதிப் பழையவடிவுடன் வைகுந்தமடைந்தார்.

உபதேசகாண்டம் - மச்சாவதாரப்படலம்.

"அலைத்த வார்புனற் சென்னியோ னுங்கவை யருளக்
கொலைத்த லைக்கொடுஞ் சூற்படைச் சாத்தனுங் குறுகி
வலைக்கு லத்தவ ருருவுகொண் டலைக்கரை வந்தா
னிலைத்த சிந்தையி னேக்கின னதற்கெதிர் நிமிர்ந்தான்.

எடுத்துவீசிய வலைகட லேழையு நிரப்பிப்
படுத்தி மூத்தலும் வலையகப் பட்டது பாரார்
நடுக்க டற்புகுந் திருவிழி பறித்தன னடந்தான்
கடுத்த வெஞ்செருக் கிழந்தது மீனமாக் கடவுள்."

---

## சிவபெருமான்
## மடங்கலீருரிபுனைந்தது.

இரணியாக்ஷன் என்னு மசுரன் தானே பிரமமெனமதித்து இரணியநமோ வென்னுஞ் சத்தமன்றி வேறென்றுங் காதிற்படாது அரசுசெய்கையில், அவன் புதல்வன் பிரகலாதனன் பால் திருமால் தன்னொரு கூறுநிறுத்தி எதிர்க்கச்செய்து தூணினின்று நாரசிங்காவதாரஞ்செய்து அவ்வசுரனைக்கொன்று அவனுதிரமுண்டு ஆரவாரிக்கையில் தேவர்கள் துதிக்க, அதனுல் கோபந்தணியாது இறுமாந்தனர். முனிவர் தேவர் முதலானோர் திருமகளைத்துதிக்க, அத்தேவியின் பிரார்த்தனைக்கும் இரங்காமை கண்டு பயந்த தேவர்கள் திருக்கயிலையடைந்து சிவபிரான்பால் முறையிட, பெருமான் வீரபத்திரக்கடவுளைப்பார்த்து "திருமால் நாரசிங்காவதாரத்துடன் கொண்டிருக்குஞ் செருக்கையடக்குக" என, வீரபத்திரர் சரபப்பட்சி வடி

வேற்றுச்சென்று நாரசிங்கத்தை இரண்டு சிறகுகளாலே யமுக்கிச் சொண்டினல் மேற்றோலையுரித்துச் சிவபிரான் திருமுன்னிலையில் வைத்தார்; தேவர் வேண்டுகோளின்படி விஷ்ணு இறுமாப்படையாதவிதம் பெருமான் அதனையணிந்தனர். திருமால் மமதைநீங்கிக் காஞ்சியில் சிவலிங்கப்பிரதிட்டை செய்து பூசித்து நாரசிங்கபுராணம் கூறிச் சுயவடிவுடன் வைகுந்தமடைந்தார்.

உபதேசகாண்டம் - நாரசிங்காவதாரப்படலம்.

" சரபப் பேருரு வெடுத்தன னளவொழி தடக்கை
விரவித் திண்சிறை வெள்ளிடை புதைத்துற மீப்பாய்ந்
துரவுத் திண்பத மெட்டினுங் கிளைத்தவெள் ளுகிராற்
கிரணப் பொற்கிரி யெடுப்பினுங் கிழங்கெனக் கிழியும்.
கறித்து மிழ்ந்தது கரங்களைக் கதிர்முடிச் சிரத்தைக்
கொறித்து மிழ்ந்தது குருதிகொப் புளித்தது பஃறேண்
முறித்த முக்கிய திடிக்குர லெழுப்பிய முழக்கிற்
செறித்த புன்செருக் கிழந்துயி ரிழந்ததச் சீயம்."—

## புராணசிரவண மகிமை.

### சிவமஹா புராணம்.

ஸூத முனிவர், நைமிசாரணிய வாசிகளாகிய சௌநகாதி முனிவர்களே! பூர்வம் புராணசிரவண பலனெத்தகையது? எனக்குச் சொல்லவேண்டுமென ஸனத் குமார முனிவர் தமது தந்தையாகிய பிரமதேவரைக்கேட்க, பிரமதேவர் அதனை ஸநத்குமார முனிவருக்குரைத்தனர். ஸனத்குமார முனிவர் பின்னொருகாலத்தில் அதனையே வியாஸபகவானுக்கு வெளியிட்டனர், அவ்வியாஸபகவான் எனக்குக் கூறியருளிய வகையேயான் உங்களுக்குச் சொல்லுகின்றேன் கேட்பீர்களாகவென்று சொல்லத் தொடங்கினர்.

பிரமதேவர் ஸநத்குமார முநிவரைநோக்கிச் சொல்லுகின்றார். புத்திரனே, யானொருகாலத்தில் இய்மலோகத்திற்கு விநோதார்த்தமாகச் சென்றபொழுது இயமதருமன் என்னைப் பலவிதமாகப் பூசித்து அர்க்கியபாத்திய ஆசமனுதிக ளாலுபசரித்தனன். பின்னர் ஓர் திவ்வியமான பீடத்தில் இருவருமிருந்து உல்லாசமாகப் பேசிக்கொண்டிருக்கையில் அற்புதமொன்றனைக் கண்டேன். அஃதென்னெனில் வைடூரிய மணிகளாற் செய்யப்பட்ட வோரமுடையதாய், பலவித ரத்னங்களாலும் முத்தங்களாலும் அலங்கரிக்கப்பட்டதாய் மணிமாலைகள் கட்டப்பட்டுக் கணகணவென்னு மொலியுடையதாகிய திவ்விய விமானத்திலேறியோர் திவ்விய புருஷன் வர, இயமன் அப்புருஷனைக் கண்டு துண்ணென்றெழுந்து சுபகரமான வார்த்தைகளைச்சொல்லி, சுகமாவென்று விசாரித்து, தர்மமுணர்ந்தவனே, உனது தரிசனத்தாற் சந்தோஷமடைந்தனன். உனக்கு இங்கிருக்க விருப்பமுள்ளவரையிலிருந்து பின்னர் நீ பிரமலோகத்திற்குச் செல்லலாம். எனக்கூறினன். அப்பொழுதே மற்றொருவன் அவ்வகைய திவ்வியவிமானமிவர்ந்து இயமதருமனிடம் வந்துசேர இயமதருமன் அவனையும் அன்புடன் பூசித்து முன்வந்தவனுக்குக் கூறியதுபோலவே உபசாரவார்த்தைகள் கூறி க்ஷேமம் விசாரித்தனன். இவ்வண்ண நிகழ்ந்ததுகண் டதிசயித்த யான் இயமனை நோக்கி, உன்னிடம் இப்பொழுது வந்த இருவரும் யாவர்? அவர்கள் செய்துள்ள நற்கருமங்கள் எவை? அவர்களை நீ கனப்படுத்திய காரணம்யாது? இவற்றையறிய விரும்புகின்றேன். தேவர்களாலேயெல்லாம் பூசிக்கப்படும் உன்னாற் பூசிக்கப்பட்டவர்கள் யாவர்? எனக்கேட்க, இயமதருமன் சொல்லலாயினன்.

பூலோகத்தில் வைதிசமென்னும் பட்டணத்தில் தாராபாலனென்னும் அரசன் சிறந்துவிளங்கினன். அந்தச் சமயத்தில் பார்வதி தேவியார் தமக்கு அபசாரஞ்செய்த ஓர் தோழியைப் பன்னிரண்டுவருஷம் நரியாய்த் திரியும்படி சபித்து விதஸ்தா வேத்திரவதி யென்னும் நதிகளின் சங்கமக்ஷேத்திரத்தில் உன்சாப மொழிகவென்றும் சாபாநுக்கிரகமுஞ் செய்தனர். அதனால் அத்தோழி நரிவடி வேற்று உலகத்தில் பன்னிரண்டுவருஷஞ் சஞ்சரித்து ஒருகாலத்தில் விதஸ்தா வேத்திரவதி நதிகளின் சங்கமஸ்தானத்தையடைந்து, அங்கு ஆகாரங்கிடைக்காது உயிர் நீங்கித் திவ்வியமான சரீரத்தை வகித்து விமானத்திலேறிச் சிவசந்நிதியடைந்து பண்

டையபணிவிடையி லிருந்தனள். அதனை யச்சமயத்தருகிருந்து கண்டதராபாலனென்னும் மன்னவன் ஆ! ஆ! அந்நரி உயிர்விட்ட வுடனே திவ்வியவிமானமேறிப் பரகதியடைந்ததன்றோ? இஃதுத்தம க்ஷேத்திரமென்று கருதி அங்கேயோர் சிவாலயங்கட்டுவித்து அதிற் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து பரிவார தேவர்களையு நிறுத்தி, திவ்வியமான மண்டப கோபுர பிராகாரமுதலியனயாவு முடித்து யாவரும் பூசித்துப் பணியச்செய்தனன். இவ்வாறிருக்கையில், புராணேதிகாசங்களை நன்றாகக் கற்றுப்பிறருக் குரைத்து, பிரமஞானமுற்ற முநிசிரேஷ்டனான ஓர் வேதியன் வர, அவனைப் பூசித்து அவன்பாலிருந்த புஸ்தகத்தையும் கந்த புஷ்ப தூபதீபங்களால் முறைப்படி பூசித்து, வினயத்துடன் அப்பிராமணனை நோக்கி, யான் சிவாலயமொன்று இங்குக் கட்டுவித்தேன். அச்சிவ சந்நிதியிற் புராணசிரவணஞ் செய்யவேண்டு மென்றுகருதிய நாற்குலத்தவர்களுங் கேட்கும்படி புராணஞ் சொல்லவேண்டும். நீர் புராணஞ் சொல்லுகையில் வருஷமொன்றிற்கு நூறு பொன் *நிஷ்கம் ஜீவனத்திற்காகக் கொடுத்துவருகிறேன். உமக்கும் இது நல்ல வுத்தியோகமாமென்று கூறி அவரைச் சம்மதிப்பித்துப் புராணஞ் சொல்லுவிக்க ஆரம்பிப்பித்து ஆறுமாதம் ஊராருடன் புராண சிரவணஞ்செய்து தன் ஆயுள் முடிந்ததால் அரசன் காலகதியாயினன். அப்பொழுதே சிவகடாக்ஷத்தால் திவ்வியமான விமானத்தைக் கொண்டுபோய் அழைத்துக்கொண்டு வந்தேன். இது இவனுடைய சுககர்மபலன். இது புண்ணியசரிதம். புராண சிரவணஞ்செய்வதால் சகல தேவர்களுக்குந் திருப்தி யுண்டாவது போல, கந்தபுஷ்பாதி உபகரணங்களாற் செய்த பூஜையாலும், கோதானம் சொர்ணதானம் வெள்ளிதானம் வஸ்திரதானம் முதலியவற்றின் தானத்தாலுந் திருப்தியுண்டாகமாட்டாது. தர்மங்களைச்சொல்லும் புராணசிரவணத்தாலேயே தேவர்கள் பிரீதியடைவார்கள். புராணேதிகாச சிரவணத்தால் யானும் அதிக சந்தோஷமடைகிறேன். அதனையே யானும் புகழ்வேன். இவன் இவ்வாறு புராணசிரவணஞ்செய்த நரசிரேஷ்டன். சத்சாவகாசத்தால் தர்மபுத்தியுண்டாகி, தர்மங்களையெல்லாம் நன்குணரப் புராணசிரவணஞ் செய்யவேண்டுமென்னும் இச்சையால், சிரத்தை பக்திகளுடன் கூடிப் புராணஞ்சொல்லச்செய்து சிரவணஞ்செய்து விசேஷமான பக்தியடைந்தனன். ஆதலின் மாறுடன் புராணஞ்சொல்லும் பெரி

* நிஷ்கம் - ஓர் நாணயம். இதுசுமார் மூன்று உளுந்தினெடையுள்ளது

யோரிடஞ்சென்று பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து உலோபாதிக ளின்றி, சுவர்ணத்தைத் தக்ஷணையாகக் கொடுத்தால், சாசுவதமா கப் பிரமபதவியை யடைவான். இரண்டாவது விமானத்தில் வந்த வனும் இதேசத்கருமஞ் செய்தவனன்றிப் பிறிதொன்றும் செய்தவ னல்லன். இவன் புராணிகனுக்கு விசேஷமான பூசைசெய்துள் ளானாதலின் அதனைக்கருதியே யான் இவனையும் பூசித்தேன். புரா ணஞ்சொல்பவனைப் பூசித்தலால் யானும் பிரமவிஷ்ணு ருத்திரர் களும் பூசிக்கப்பட்டவர்களாவோம். சிரார்த்தாதி காலங்களில் உத்தமமானபக்ஷிய போஜனங்களுடன் ஒருமுறை பூஜைசெய்கின்ற வர்கள் என்னைப்பதினைந்து வருஷங்கள் பூசித்தபலனை யடைவார் கள். புராணப்பிரசங்கியை ஒருமுறை திருப்திசெய்த பக்ஷத்தில் அநேகவருஷங்கள் யான் திருப்தியடைவேன். யான்மட்டுமன்றி, இந்திராதி சகலதேவர்களும் பிரமவிஷ்ணு சிவாதிகளுந் திருப்தி யடைவார்கள். புராணப்பிரசங்கி சந்தோஷிப்பானாயின் சமஸ்த தேவர்களும் திரிமூர்த்திகளும் சந்திர சூரியர்களும் கிரகங்களும் சந்தோஷிப்பார்கள். ஸ்நானம் பூஜை ஜபம் ஹோமம் சாஸ்திரம் சவுசம் அஹிம்ஸை விரதாசரணம் உபவாசம் தைரியம் மௌன விரதம் இந்திரியநிக்கிரகம் பிரமஞானம் குரோதமின்மை தானம் க்ஷாந்தி தயை தவம் வாவி கூப தடாகங்களின் பிரதிஷ்டை சாந் திராயணம் யாகங்கள் தீர்த்தங்கள் ஆச்சிரமங்கள் முதலியனவெல் லாம் தர்மசாதனத்திற்காகவே யிருக்கின்றனவென்று பெரியோர் கூறுவார். தர்மத்தாலேயே பொருளும் காமமும் மோக்ஷமும் உளவாகும். சதுர்வித புருஷார்த்தங்களாலேயே இகபரங்களில் நிரந்தரசுகமுண்டாகும். பாவத்தால் துக்கமுண்டாகுமாதலின் பாவத்தைச்செய்யாமல் தர்மத்தை யாசிரயித்துப்புண்ணிய கருமங் களையே செய்யவேண்டியது.

அவ்வகையதருமமும் ஸத்வமயம் ரஜோமயம் தமோ மய மென முத்திறப்படும். ஸத்வமயமான தருமம் தவத்தால் பிரம ஞானமடைந்த முனிவர் சித்தர்களிடத்தில் எப்பொழுதும் நித்திய மாகவிருக்கும். ரஜோமயமான தருமம் தேவர்களிடத்திலிருக்கும். தமோமயமான தருமம் தானவதைத்தியரிடமிருக்கும். பரிசுத்த மான இவர்களுடைய சத்கருமம் சொல்லப்பட்டது. இதுசத்தி யம். அத்திவ்வியபுருஷர்களிருவரும் மகாபுண்ணியர்கள். அவர் களுடைய சரிதத்தை நீ கேட்டனையாதலின் நீ புண்ணியபுருஷ னென்பதிற் சந்தேகமில்லை. இயமன் கூறியவை யாவும் சத்திய

மென்று யாவரும் நம்பவேண்டும். புத்திரனே, எனக்கு ஐந்தாவது முகமொன்றிருந்தது. அம்முகத்திலிருந்தே புராணங்கள் பலவிதமாக வெளிப்பட்டு உலகத்திற்கு இதத்தைச்செய்கின்றன. புராணங்கள் எனக்குப் பிரீதிகரமானவை. வேதவேதாங்கங்களும் எனக்குப் புராணங்கள் போலப் பிரீதிகரமானவையன்று. இப் புராணேதிகாசங்களைச் சிரத்தை பக்திகளுடன் புராணிகனுக்குச் சிவனுபாய விருத்தியையுண்டுசெய்து, எப்பொழுதுஞ் சிரவணஞ் செய்வோர் உத்தமமான கதியை யடைவார்கள். தர்மார்த்த காம மோக்ஷங்களைப் பூலோகத்தில் நன்றாக விளக்குவதற்காகவே புராணேதிகாசங்கள் எல்லாவற்றையுஞ் சொன்னேன். இவை வேதார்த்தத்தை விஸ்தீரணமாகச் சொல்லத்தக்கவை. சுலபபாண்டித்திய முடையவர்கள் வேதார்த்தத்தையுணரா ராகையின் அவர்களும் நன்குணருமாறு விஸ்தீரணமான புராணேதிகாசங்களைச் சொன்னேன். தர்மப்பிரதிபாதகமான இவ்வகைய புராணேதிகாசங்களைச் சிரவணஞ் செய்பவனும் பக்தியோடு பாராயணஞ் செய்பவனும உத்கிருஷ்டமான ஸ்தானத்தை யடைவார்கள். புராணசிரவணகாலத்தில் தக்ஷிணைகொடுத்துக் கேட்கும்பக்ஷத்தில் பரமார்த்த ஸ்வரூபத்தில் ஐக்கியமாகின்றான். இஃதொரு ஆச்சரியமல்ல. பாத்திரனுக்குத்தானஞ் செய்தபக்ஷத்தில் அவனுக்குயாவுங் கைகூடும். தீர்த்தங்களில் கேதாரம், விரதங்களில் மஹாவிரதம், பர்வதங்களில் மேரு, பக்ஷிகளிற் கருடன், நதிகளிற் கங்கை, தேவர்களிற் சர்வேசுவரனாகிய சிவபெருமான், பாத்திரங்களில் வாசகன் [புராணிகன்] சிரேஷ்டமாம். இவ்விஷயத்திற் சிறிதுஞ் சந்தேகமில்லை. புராணஞ் சொல்லுகையில் பக்தியோடு பூஜைசெய்தவன் சகலதேவர்களையும் பூஜை செய்தவனாவான். புராணபாராயணம் சிரவணஞ்செய்தவர்கள் பெறும்புண்ணியம் ஆச்சரியம். விசேஷமான தானங்கொடுத்துச் சிரவணஞ்செய்தவனுடைய பலன் இன்னும் விசேஷமானது. நாடோறும் பக்தி சிரத்தையோடு சிவசந்நிதானத்திலிருந்து சிரவணஞ் செய்தவன் சிவசாயுச்சியத்தை யடைவதிற் சிறிதும் ஐயமில்லை இதுசத்தியம் என்று கூறியருளினர்.

---

## ஓர் நன்கொடை

---

வள்வலூர் குமாரகுப்பம் ஸ்ரீ சண்முகசுவாமிகள் மடாலயம் ஸ்ரீமத் சுந்தரானந்த சுவாமிகள் இத்திருக்கூட்டத்தினர் செய்யும் சமய பரிபாலனத்தினிமித்தம் 10 ரூபா நன்கொடையாக மணியார்டர் செய்தனுப்பி உபகரித்தார்கள். **பத்திரிகாசிரியர்.**

# சித்தாந்த நவநீதம்.

சித்தாந்த நவநீதம் என்னும் விடய சம்பந்தமாக இனி பல சிறந்த சிறு வியாசங்கள் வெளிவரும். இவைகளை மந்த புத்தியுடையவர்களும் ஒரு முறைக்குப் பலமுறையாக வாசிப்பார்களாயின் ஞானநெறியிற் றலைப்படலாகும்.

## பதி பசு பாசம்.

இவ்வுலகத்தில் உயிருள்ளனவும் உயிரில்லனவுமாகிய இருவகைப் பொருள்களிருப்பதை நாம் பிரத்தியட்சமாக அறிகிறோம். இவைகளைப் படைத்த சர்வ வல்லமையும் பேரறிவுமுள்ள கடவுள் ஒருவர் உண்டு என்பதை அநுமானத்தாலும் நூல்களாலும் அறிகிறோம். ஆக மூன்று பொருள்களை நாம் அறிகிறோம். எல்லாப் பொருள்களும் இம்மூன்றினுள் அடங்கும். இம்மூன்று பொருள்களின் இலக்கணங்களைக் கூறுவதற்கே உலகில் பல சமய நூல்கள் உண்டாயின. இவற்றுள் கடவுளைப் பதியெனவும், உயிர்களைப் பசுவெனவும், உயிரில்லாதனவாகிய சடப்பொருள்களைப் பாசம் எனவும் சித்தாந்த சாஸ்திரம் கூறும். கடவுளும் உயிர்களும் சித்துப் பொருள்கள்; அதாவது, அறிவுடைப் பொருள்கள். பாசம் அசித்துப் பொருள்; அதாவது அறிவில்பொருள். எல்லாவற்றையும் கடந்தது எதுவோ, அதாவது, பிருதிவிமுதல் நாதமீறாகச் சொல்லப்பட்ட பாசகாரியமாகிய தத்துவங்களனைத்தையுங் கடந்து, மனம் வாக்குக் காயங்களால் அறியப்படாதது எப்பொருளோ, அப்பொருள் கடவுள் எனப்படும். அப்பொருளுக்குப் பசுக்கள் அடிமைகளாகவும், பாசம் உடைமையாகவும் இருத்தலால் அது பதியென்னப்படுகின்றது. உயிர்கள் பாசத்தடை யுடையவைகளாயிருப்பதனால் பசு என்னப்படுகின்றன. இவைகள் ஆன்மாக்கள் எனவும்படும். பாசம் என்பது ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களை. (பாசம் = கயிறு). இவை உயிர்களைக் கயிறுபோல் பந்தித்திருத்தலால் பாசம் என்னப்பட்டன.

பதி என்றும் ஒன்றே. உயிர்கள் என்றும் அளவிறந்தன. பதியும் பசுவும் பாசமும் அநாதிநித்தப் பொருள்கள். அதாவது, தோற்றமும் ஈறுமின்றி என்றும் உள்ள பொருள்கள். பதி என்று உண்டோ அன்றே பசு பாசங்களும் உண்டு. பதியும் பசுவும் அநாதி நித்தப் பொருள்களாயிருந்தாலும், பதி மலரகிதமாகவும், பசு மலசகிதமாகவும் இருக்கும். அதாவது, பதிக்கு இயல்பாகவே பாசத்

தொடக்கில்லை. பசுவோ இயல்பாகவே பாசத்தோடு கூடியதா யிருக்கும். எப்படியெனில், செம்பானது இயல்பாகவே களிம் போடுகூடி யிருத்தல்போலென்ப. பசுவுக்கு மூன்றுவிதமான நிலை கள் உண்டு. அம்மூன்று நிலைகளும் முறையே கேவலாவத்தை, சக லாவத்தை சுத்தாவத்தை எனப்படும். இவற்றுள் கேவலாவத்தை யென்பது உயிரானது ஓரறிவுதானும் இன்றி ஆணவம் என்னும் மலத்தாற் கட்டுண்டு கிடக்கும் நிலை. அதாவது ஆன்மாவானது அறிவுப் பொருளாயிருந்தும் ஆணவம் என்னும் மலத்தின் வசப் பட்டுத் தன் அறிவும் ஆற்றலும் அற்பமும் விளங்காமல் கிடந்து துன்புறும் அவசரம். இந்நிலை தாயின் கருப்பாசயத்திற் கட்டுண்டு அறிவும் செயலுமின்றிக் கிடக்கும் ஒரு சிசுவின் நிலைக்குச் சமமாகச் சொல்லப்படும். (இதனைக் காரிட்ட வாணவக் கருவறையிலறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போற் கட்டுண்டிருந்த வெமை வெளியில் விட்டு என்னும் முதலையுடைய தாயுமானசுவாமிகள் திருப்பாட லுக்கு இப்பத்திரிகை முதல் மலரில் வெளியிட்டிருக்கும் விரிவுரை யாற்றெளிக). செம்பானது களிம்பினின்று நீங்கப் பொன்னாவது போல் ஆன்மாவானது தன்னை அனாதியாகவே பிணித்திருக்கும் ஆணவமலத்தினின்றும் நீங்கிஞல் பேரறிவும் பேராற்றலும் பெற் றுச் சிவமேயாக நின்று சிவானந்தத்தை யனுபவிக்கும். இதனை யுணர்ந்த பரம கருணாநிதியாகிய இறைவர் அவ்வாணவ மல வலியை யடக்கி உயிர்களின் அறிவையும் செயலையும் விளக்குமாறு திருவுள மிரங்கி மற்றொரு மலமாகிய மாயையைக்கொண்டு அவைகளுக்குத் தனு கரண புவனபோகங்களைக் கொடுத்து பல பிறவிகள் எடுக்கச் செய்கிறார். தனுவென்பது பலவகைப்பட்ட சரீரங்கள். கரணம் என் பது சரீரத்திலுள்ள அந்தக்கரணங்களும், புறக்கரணங்களும். புவ னம் என்பது உயிர்கள் பிறக்கும் இடங்கள். போகம் என்பது உயிர் கள் அனுபவிக்கும் இன்பதுன்பங்கள். இவ்வாறு உயிர்கள் பிறவி கள் எடுத்துழலும் அவசரம் சகலாவத்தை யென்னப்படும்.

முதலில் ஓரறிவுதானும் விளங்காதிருந்த உயிர்களுக்குப் புல் பூடு மரம் முதலிய பிறவிகளைக் கொடுத்து ஸ்பரிசம் என்னும் ஓரறிவு விளங்கச்செய்கிறார். பின்னர் இப்பி சங்கு முதலிய பிறவி களைக்கொடுத்து பரிச உணர்ச்சியோடு இரத உணர்ச்சியும் விளங்கு மாறு செய்கிறார். அதன் பின் கறையான் எறும்பு முதலிய பிறவி களில்விட்டு கந்த உணர்ச்சியும் உணர்த்துகிறார். அதன்பின் தும்பி வண்டு முதலிய பிறவிகளிற் செலுத்தி உருவமும் அறியச் செய்

கிருர். அதன்பின் பறவைகளாகவும் விலங்குகளாவும் பிறக்குமாறு செய்து சத்தத்தையும் உணர்த்துகிருர். இவ்வாறு சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐவகையுணர்வும் நிரம்பிய பின் மனிதப்பிறவியிற் செலுத்தி சித்தத்தாலறியும் அறிவையும் கொடுத்து இதாகிதங்களைப் பகுத்தறியுமாறு செய்து, தீவினையொழித்து நல்வினையே செய்யவேண்டி வேதாகமங்களை யருளிச் செய்கின்றனர். (ஆன்மாக்கள் செய்யும் நல்வினை தீவினைகள் மும்மலங்களுள் ஒன்ருகிய சன்மமலம் என்னப்படும். இம்மலத்திலக்கணத்தை முதன்மலரைப் பார்த்தறிக). தீவினை செய்வாரை நரகத்திலிட்டும், கீழான பிறவிகளிற் செலுத்தியும், தண்டித்து மீண்டு மீண்டும் மனிதப்பிறவியில் விடுகிருர். நல்வினை செய்வார்க்குச் சொர்க்காதி போகங்களைக் கொடுத்தும், சரியை கிரியா யோகங்களிற் செலுத்தியும் மல பரிபாகம் உண்டாகும் சமயம் பார்த்து ஞானசிரியரா யெழுந்தருளி ஞானதீக்கைசெய்து பாசக்ஷயம்பண்ணி பதிஞானத்தை யுணர்த்தி தன்னுடன் இரண்டறக்கூட்டி எல்லையற்ற இன்பமார்ந்திருக்குமாறு செய்கின்றனர்.

---

பேரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளேல்லாம் பிறவாநாளே.

இதுவரையிற் கூறியவாற்ருல் கேவலாவத்தையிற் கிடந்து அறிவு ஒரு சிறிதுமின்றி ஆணவமலத்தாற் பணிப்புண்டு மிக மோகமாகிய அந்தகாரத்திலிருக்கும் ஆன்மாக்களின் மீது கருணைகூர்ந்து சிவபெருமான் அவைகளுக்குப் பல பிறவிகளைக் கொடுத்து அறிவு விளங்குமாறு செய்து, அவ்வாணவ மல வலியைத் தொலைத்துத் தமது பரமானந்தப் பதமலர் நீழலைத் தந்தருளுகின்ருர் என்பது பெறப்பட்டது. சிவபெருமான் தமக்கென ஓர்குறி குணம் செயல் ஒன்றும் இல்லாதிருந்தும் இவ்வாறு ஆன்மாக்களுக்கருள் செய்யும் பொருட்டு அவற்றின் பக்குவங்களுக்கேற்ப எண்ணிறந்த அருளுருவங்களைக்கொண்டு பஞ்ச கிருத்தியங்களைச் செய்தருளுகின்ருர். ஆதலால் யாதினும் மிகவரிய இம்மானிடப் பிறவியைப் பெற்றவர்கள் இப்பிறவியிலேயே அவரோடு ஒத்துச்சென்று ஆட்படவேண்டும். இல்லாவிடில், இறைவனுர் இவர்களுக்குப் பலபிறவிகளைக் கொடுத்து அறிவை விளக்கியதினுல் இவர்களுக்கு யாதொரு பயனுமின்ருய், இவர்கள் அவமேகழிக்கும் நாட்கள் சகலாவத்தையிற்றங்கி பிறவியெடுத்து அறிவு விளங்கப்பெற்ற நாட்களாகாமல், கேவலாவத்தையிற் கிடந்து பிறவியெடாமல் அறிவின்றித் துன்புறும் நாட்களோ டொப்பனவாம். ஆதலால் அமிழ்தினுமினிய தமிழ்வேதம் "பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே" என்றருளிச் செய்தது.

பத்திரிகாசிரியர்.

---

# சிவபரத்துவம்

கடவுள் ஒருவரே சிருட்டி திதி சங்காரம் என்னும்மூன்று தொழில்களைச்செய்ய பிரமா விஷ்ணு உருத்திரன் (எனப்படும் சிவன்) ஆகியமூன்று மூர்த்திகளாயிருக்கிறார் என்பது பலர் அபிப்பிராயம். விஷ்ணுவே பரம்பொருள் என்பதும் பிரமன் விஷ்ணுவினலும், சிவன் பிரமனலும் படைக்கப்பட்டவர்கள் என்பது வைணவர்களின் கொள்கை. சிலர் "சிவன் மசானத்தில் வசித்துக்கொண்டு பூதபிசாசபேய்களோடாடும் ஒரு பிசாசத்தலைவன். இவனைத்திராவிடர் தெய்வமென்று வணங்குகிறார்கள்" என்கிறார்கள். இவ்வாறு ஆங்கிலத்தில் சிலநூல்களும் இயற்றி வைத்திருக்கிறார்கள். இவ்வாறு சிவ பரம்பொருளின் இலக்கணந்தெரியாமல் பலர் பலவிதமான விபரீதக்கொள்கைகளை யுடையராய்ப் புத்தகவாயிலாகப்பிறரையும் தம்வயமாக்கி வருகின்றனர். சைவசமயிகளாகிய நம்மவர்களுள்ளும் பலர் தங்கள் சமய நூலுணர்ச்சியில்லாமையால் இவர்கள் சொல்வதைக்கேட்டு மயங்குகிறார்கள். நம்மவர்கள் அனுவசியமான பலவழிகளில் வீணே எவ்வளவானலும் பொருள் செலவிடுகிறார்களேயன்றி இவ்விபரீதங்களை விலக்கப்பொருள் செலவிடுவதில்லை. எம்போலிகள் இதுபோன்ற பத்திரிகைவாயிலாகக் கூடுமானவரையில் சனங்களுக்கு உணர்த்த முன்வரினும் இவர்களை ஆதரிக்க முன்வருவாரில்லை. ஆதரிப்பாரின்றி பத்திரிகை நடைபெறுதொழியின் குறை கூறுவதற்குமாத்திரம் இவர்கள் பின்னிடுகிறதில்லை. சைவர்கள் என்று பேர் வைத்துக்கொண்டு, விபூதி உருத்திராக்கங்களை யழகுபெற வணிந்துகொண்டிருக்கும், ஆயிரம் பேர்களுள் பதின்மரேனும் இத்தகைய பத்திரிகைகளை வாங்கி வாசிப்பார்களானல் போதுமே. இவர்கள் தங்கள் குழந்தைகள் விளையாடுதற்கும் வேடிக்கைகளுக்கும் பந்து மித்திரர்களைச் சந்தோஷிப்பதற்கும், செலவிடும் தொகையில் ஒரு சிறுகூறு சைவ சமய பரிபாலனத்தின் பொருட்டுக் கொடுக்கலாகாதா. கொடுக்க இயலுமாயினும், உண்மையான சைவப்பற்று இல்லாமையால் கொடுக்கமனம் வருகிறதில்லை. வருடம் ஒன்றுக்கு டைட்டில்பேஜ் உட்பட 42 பாரம் கொண்டதாக ஒருபத்திரிகை வெளிவந்தும் ஒரு ரூபாகொடுத்து வாங்கிப்படிக்க மனம் வரவில்லை. சைவர்கள் இவ்வாறிருந்தால் இவர்கள் வழிபடும் கடவுளைப் பேய் பிசாசென்று அயலவர் நிந்திப்பது அதிசயமாமோ. அதிசயமாகாது. ஆகாது. இனி யாம் சிவபரத்துவம் என்னும் விடயத்தின்கீழ் பலசிறு வியாசங்களை வெளியிட்டு வருவோம். உண்மைச் சைவாபிமானிகள் அசட்டையால் இதுவரையில் இப்பத்திரிகையைப் பெறுதவர்கள் இனியேனும் பெறுமாறு நல்லறிவுச் சுடர்கொளுத்திச் சைவர் பல்லாயிரவரும் இப்பத்திரிகையை வாங்குமாறுசெய்யப் பிரார்த்திக்கின்றேம்.

பத்திரிகாசிரியர்.

# 1919-20-ம் வருஷத்திய நெல் பயிர் விளைவு.

(அறிவிப்பு ஆபீஸிலிருந்து.)

---

விவசாய டிபார்ட்மெண்டு டைரெக்டர் பின்வருமாறு எழுதியிருக்கிறார் :—

1919-ம் வருஷம் நவம்பர்மாதம் கடைசிவரை சென்னை இராஜதானியில் நெல் பயிரிடப்பட்ட விஸ்தீரணம் 10,522,000 ஏக்கர் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. சென்ற வருஷத்தில் பயிரிடப்பட்ட விஸ்தீரணம் 8,347,000 ஏக்கர்தான். ஆக, ராஜதானி முழுவதிலும் நெல் பயிரிடப்பட்ட விஸ்தீரணம் இந்த வருஷத்தில் நூற்றுக்கு 26 வீதம் அதிகப்பட்டிருக்கிறது. குண்டூரைத் தவிர மற்றெல்லா ஜில்லாக்களிலும் இந்த வருஷம் நெல் பயிரிடப்பட்ட விஸ்தீரணம் அதிகப்பட்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் இந்தவருஷம் பெய்த நல்ல மழையே. அதோடு, முந்தின வருஷங்களில் பருத்தி, நிலக்கடலை பயிரிடப்பட்ட நிலங்களிலும், சிறு குளங்களின் ஆயக்கட்டு நஞ்சைகளிலும் இந்த வருஷம் குடிகள் நெல் பயிரிட்டிருக்கிறார்கள். இந்த வருஷ விளைவும் சாதாரண வருஷ விளைவைவிட ஜாஸ்தியாயிருக்கும் என்பது சந்தோஷப்படத்தக்க காரியமே. இதுவரை தெரிந்தமட்டில் சாதாரண வருஷத்தைவிட நூற்றுக்கு ஒன்பது வீதம் இந்த வருஷ விளைவு அதிகமாயிருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. விசாகபட்டணம், கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் ஜில்லாக்களில் அறுவடைக்கு சற்று முந்தி பெருமழை பெய்ததினால் கொஞ்சம் நஷ்டமுண்டாயிற்று. இதனால் மொத்த விளைவு கொஞ்சம் குறையலாம், ஆனால் கஞ்சம், கர்நூல், நெல்லூர், கோயம்புத்தூர், திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் சாதாரண வருஷங்களைவிட மிகவும் நன்றாய் விளைந்திருக்கிறதாகத் தெரிகிறது. மலையாள தேசத்தில் இந்த வருஷத்தில் ஒரு காலத்திலுமில்லாதவிதமாய் நன்றாய் நெல் விளைந்திருக்கிறது.

# விவசாயப் பஞ்சாங்கம்

---

நமது கருணைபொருந்திய அரசாங்கத்தார் சிலமாதங்களாக (Publicity Bureau) அறிவிப்பு ஆபீசு என்னும் ஒரு ஆபீசுவைத்து நடத்துகிறார்கள். இந்த ஆபீசில் ஜனங்களுக்கு அவசியமான கல்வி வர்த்தகம் கைத்தொழில் குடிகளின் க்ஷேமத்தை கருதிச் செய்யப்படும் காரியங்கள் முதலியன சிறுபத்திரிகைகள் வாயிலாகவும் சிறு புத்தகங்கள் வாயிலாகவும் வெளியிடப்படுகின்றன. இவைகளைச் சனங்களுக்கு இலவசமாகக் கொடுத்தும் பலருக்கும் விளக்கியும், அவசியமாய் அறிவிக்கவேண்டிய விஷயங்களைத் தங்களுக்குத் தெரிவிக்கவும் வேண்டி ஷை ஆபீசார் பலரைக் கௌரவ கரெஸ்பாண்டெண்டுகளாக (கடிதக்காரர்களாக) நியமித்திருக்கிறார்கள். இவர்களுள் யானும் ஒருவன். ஷை ஆபீசார் இது வரையில் பல பத்திரிகைகளும் சிறு புத்தகங்களும் வெளியிட்டார்கள். இவற்றுள் இவ்வருடத்து "நெற்பயிர்விளைவு" என்னும் விஷயமாக வெளியிட்டிருப்பதை இப்பத்திரிகையின் டைட்டில்பேஜ் மூன்றும் பக்கத்தில் அச்சிட்டிருக்கிறேன்.

ஷை ஆபீசிலிருந்து கூடிய சீக்கிரத்தில் விவசாயப் பஞ்சாங்கம் ஒன்று 1920௵ எப்ரல்மீ 1உ முதல், 1921௵ மார்ச்மீ 31உ வரையிலுள்ள வருடத்திற்கு வெளிவரும். இது திறமைவாய்ந்த சோதிடநூல் வல்லவரைக்கொண்டு எழுதப்பட்டதும், விவசாயசம்பந்தமாய் சனங்கள் அறியவேண்டிய பல விஷயங்களை நன்றாய் எடுத்து விளக்குவதும், விடுமுறைநாட்கள், பண்டிகைகள், ஆங்காங்குக் கூடும் சந்தைகள் முதலியவற்றைக் காட்டுவதுமாய், ஆங்கிலம் தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் என்னும் பாஷைகளில் வெவ்வேறெவெளிவரும். இதின்விலையோ அணா ஒன்றே. இது ஒவ்வொருவர் வீட்டிலும் அவசியம் இருக்கத்தக்கதாம். இதைவேண்டுவோர் தங்களுக்கு எந்தபாஷையில் வேண்டுமோ அந்த பாஷையைத் தெரிவித்து எனக்கு மணியார்டர் செய்து பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். பலர் ஒன்றுசேர்ந்து பல பிரதிகள் தருவித்துக் கொண்டால் பல விதத்திலும் அநுகூலமாயிருக்கும்.

இ. ஆதிமூல முதலியார்
பத்திரிகாசிரியர்.